# அரசியல் பொருளாதார அணுகுமுறை



e-தக்ஸலாவ கல்விக்கூடம்
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

# அரசியல் பொருளாதார அணுகுமுறை

- இது அரசியலை பொருளியல் நோக்கில் பார்க்கும் முறையே 19 ம் நூற்றாண்டின் பின்னையப் பகுதியில் அறிமுகமாகி மாக்சிச கோட்பாட்டோடு முறையாக அரசறிவியலில் அறிமுகமாகியது.

- எனினும் 18 நூற்றாண்டில் முதல்முதலாக ஐரோப்பிய சிந்தனையாளரான அடம் ஸ்மித், டேவிட் ரிகாடோ, ஜோன் ஸ்டுவட் மில், தோமஸ் மல்தஸ் போன்றோரால் முன்வைக்கப்பட்டிந்தது.

- பொருள் உற்பத்தி, சந்தைப்படுத்தல், தேசிய வருமானம் போன்ற பொருளாதார செயன்முறைகள் அரசாங்கத்தின் கொள்கைகளோடு தொடர்படும் முறை என்பவற்றை ஆய்வு செய்வதே அரசியல் பொருளியல் அணுகுமுறையாகும்.

- கால்மாக்ஸ் அரசியல் பொருளியல் சம்பிரதாயத்தினை மாற்றியமைத்தான். ஆதன் படி வரலாற்று பொருள் முதல் வாதத்தின் மூலம் மனித வரலாறு, சமூககட்டமைப்பு, பொருளாதார, அரசியல் சிந்தனைகள் என்ற அனைத்தையும் ஒட்டுமொத்தத்தில் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பிரிவும் மற்றும் ஒட்டுமொத்தத்திற்கு இடையில் காணப்படும் தொடர்புகளை ஆராய்வதற்காக முன்வைக்கப்பட்ட கோட்பாடு.

- வரலாற்றைப் பொருள் முதல் வாதத்தின் பிரதான கோட்பாட்டு அங்கங்கள்.

  முழு சமூக்கத்தையும் அறிமுகம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட எண்ணக்கரு ” சமூக ஒழுங்கமைமைப்பு” என கூறப்படும்.

- இவ் சமுக ஒழுங்கமைப்மைப்பு இரண்டு மட்டங்களைக் கொண்டது.

  I பொருளாதார தளம்

  II அரசியல், சமுக, கலாசார கருத்தியல் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய உயர் கட்டமைப்பு.

- சமுக உருவமான மாற்றம் இறுதியில் பொருளாதார மாற்றமாகவே துலங்குகிறது.

தொகுப்பு :- திருமதி. நஞ்சினி பாலகரன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- சகல சமுகங்களிலும் வர்க்கப் போராட்டமே சமுக பொருளாதார அரசியல் பரிவர்த்தனைகளின் இயங்கு தன்மையாகும்.

- பெரிதும் மெய்பிக்கக்கூடிய, தர்க்கிக்கூடிய நடத்தைவாத அரசியல் அணுகுமுறைகளுக்கு மாற்று முறையாகவே மாக்சிக கோட்பாட்டின் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு அரசறிவியல் பாடத்துறையில் இவ்வனகுமுறை பிரவேசிக்கிறது.

- இவ்வாறு முறைப்படி அரசியலானது, சமுக வர்க்கங்கள் என்ற காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றது.

- அரசியல் அடிப்படை கருப் பொருட்களாக அதிகாரம் ஆணையதிகாரம், வர்க்கவேறுபாடு, வர்க்க மோதல் அரசு ஆணையதிகாரத்திற்கு எதிரான சமுகத் துலங்கள் என்பவை கவனத்தில் எடுத்தல்.

- அரசியல் கற்கையானது சமுக பொருளாதார பரிவத்தனைக்காக அர்ப்பணிக்க வேண்டும் என நம்பதல்.

- அரசியல் ஆய்வு சமுக அரசியல் பொருளாதார போன்ற துறைகளில் காணப்பட்ட அதிகாரத்துவம் மற்றும் அதிகார கட்டமைப்பு விமர்சனத்துக்குள்ளாக்கப்பட வேண்டும். என்ற இலக்கோடு இருத்தல்.

- இதனடிப்படையில் அரசியல் பொருளியல் அணுகுமுறையானது தற்போது மாக்சிசவாதக் கோட்பாடு மற்றும் அணுகுமுறையை அடையாளப்படுத்துகிறது.

- 19 ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற மாக்சிசவாதத்தத்துவம், பொருளியல், அரசியல் மற்றும் சமுக விஞ்ஞான பிரிவுகளிலும் காணப்படுகின்றது.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வினாக்கள்



01. அரசியல் பொருளாதார அணுகுமுறை தோற்றம்பெற்ற காலப்பகுதியையும், எங்கு தோற்றம் பெற்றது என்பதையும் குறிப்பிடுக.

02. அரசியல் பொருளாதார அணுகுமுறை பற்றி முன்வைத்த சிந்தனையாளர் இருவரை குறிப்பிடுக.

03. சமுக ஒழுங்கமைப்பு பிரதான இரு தளங்களிலானது. ஆவ்விரு தளங்களையும் குறிப்பிடுக.

04. அரசியல் பொருளாதார அணுகுமுறை பற்றி ஆராய்க.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk